ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2133/36 - 2019 ජූලි මස 24 වැනි බදාදා - 2019.07.24
*2133/36 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 1/2019*

**2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம்**

*2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகள்.*

தலதா அதுகோரல,
நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு.
*2019, யூலை 18.*

**வழிகாட்டுநெறிகள்**

1. சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் ஒரு தடுத்துவைத்தல் இடத்தைத் தேடுகையிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவரினால் அவ்வாறு நடாத்தப்படும் தேடுகையொன்று இவ்வழிகாட்டு நெறிகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

### பாகம் I

### குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களுக்கான அதிகாரவளிப்பு

2. சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழான அதிகாரவளிப்பொன்று பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) தேடுகையை நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட அலுவலரின் பெயரும் பதவிப் பெயரும் ;

(ஆ) அதிகாரவளிப்புத் தேதி ; அத்துடன்

(இ) தேடுகையின் நோக்கம்.

### பாகம் II

### முன்னறிவித்தலின்றித் தேடுகையிடுதல்

3. ஒரு தடுத்துவைத்தல் இடத்தைத் தேடுகையிடுதலானது, அத்தகைய தடுத்துவைத்தல் இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனுமாளுக்கு ஏதேனும் முன்னறிவித்தல் கொடுக்கப்படாமல் எந்நேரத்திலும் அதிகாரமளிக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவரினால் நடாத்தப்படலாம்.

4. ஒரு தேடுகை தொடங்கப்படுகையில், அதிகாரமளிக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவர், அவ்வதிகாரவளிப்பை ஒரு தடுத்துவைத்தல் இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்குக் காண்பித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தடுத்துவைத்தல் இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய ஆள் கோரிக்கையொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய அதிகாரவளிப்பின் பிரதியொன்றைக் கொடுத்தலும் வேண்டும்.

### பாகம் III

### ஒரு தடுத்துவைத்தல் இடத்தைத் தேடுகையிடும்போது பிரயோகிக்கப்படவேண்டிய தத்துவங்கள்

5. அதிகாரமளிக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவர் -

(அ) ஒரு தடுத்துவைத்தல் இடத்தின் வளவுகளினது ஏதேனும் பாகத்தைத் தேடுகையிடலாம் ;

(ஆ) தடுத்துவைத்தல் நிலைமைகளை நிச்சயிப்பதற்கு அல்லது காஆஅ வின் பணிப்பாணை தொடர்பான ஏதேனும் கருமம் தொடர்பில் அத்தகைய தடுத்துவைத்தல் இடத்திலுள்ள எவரேனுமாளை வினவலாம் ;

(இ) அத்தகைய தடுத்துவைத்தல் இடத்தில் காணப்படும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை வைத்திருக்கலாம் ;

(ஈ) பந்தி (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் பிரதிகளை எடுக்கலாம் ;

(உ) அத்தகைய தடுத்துவைத்தல் இடத்தில் காணப்பட்ட ஏதேனும் அடையாளம் அல்லது உண்மையான சான்று உட்பட, அத்தகைய தடுத்துவைத்தல் இடத்தின் அல்லது ஏதேனும் பொருளின், ஆவணத்தின், வாகனத்தின் அல்லது வேறேதேனும் விடயத்தின் நிழற்படங்களை எடுக்கலாம் ; அல்லது

(ஊ) ஒரு தடுத்துவைத்தல் இடத்திலுள்ள ஏதேனும் வாகனத்தைத் தேடுகையிடலாம்.

### பாகம் IV

### நடவடிக்கை முறைசார் தேவைப்பாடுகள்

6. காஆஅ ஆனது, அதிகாரமளிக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களினால் நடாத்தப்பட்ட தடுத்துவைத்தல் இடங்களின் எல்லாத் தேடுகைகளும் பற்றிய பேரேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

7. ஒரு தடுத்துவைத்தல் இடத்தின் தேடுகையொன்றை நடாத்துகின்ற காஆஅ வின் அதிகாரமளிக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவர், அத்தகைய தேடுகை முடிவுற்ற பின்னர் உடனடியாக அத்தகைய தேடுகை பற்றிய எழுத்திலான பதிவொன்றைப் பேரேட்டில் செய்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாகத் தேடுகை முடிவுற்ற பின்னர் உடனடியாக அத்தகைய பதிவு செய்யப்பட்டிராதவிடத்து, அத்தகைய பதிவானது நியாயமான முறையில் செயல்முறைக்குகந்தவாறு விரைவாகச் செய்யப்படுதல் வேண்டும்.

8. வழிகாட்டுநெறி 7 இன் கீழ் பேரேட்டில் செய்யப்பட்ட எழுத்திலான பதிவேடொன்று பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :

(அ) தேடுகையின் அதிகாரவளிப்புப் பற்றிய விபரங்கள் ;

(ஆ) தேடுகையானது எந்த தடுத்துவைத்தல் இடத்தில் நடாத்தப்பட்டதோ அந்த தடுத்துவைத்தல் இடத்தின் முகவரி ;

(இ) தேடுகையின் தேதி, நேரம் மற்றும் காலநீட்சி ;

(ஈ) தேடுகை நேரத்தில் தடுத்துவைத்தல் இடத்தில் சமுகமளித்துள்ள ஆட்களின் பெயர்களும் ஏதேனும் விவரணஞ்சார் தகவலும் ;

(உ) தேடுகையின்போது வைத்திருக்கப்பட்ட எவையேனும் பொருட்களின், ஆவணங்களின் அல்லது ஆவணங்களிலிருந்து எடுக்கப்பட்ட பிரதிகளின் விரங்கள் ; அத்துடன்

(ஊ) வழிகாட்டுநெறி 5 இன் பந்திகள் (உ) மற்றும் (ஊ) என்பவற்றின் கீழ் எடுக்கப்பட்ட எவையேனும் நிழங்படங்களின் அல்லது தேடுகைசெய்யப்பட்ட வாகனங்களின் விபரங்கள்.

9. தடுத்துவைத்தல் இடமொன்றின் தேடுகையை நடாத்துகின்ற காஆஅ வின் அதிகாரமளிக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவர், அத்தகைய அலுவலர் அத்தகைய தடுத்து வைத்தல் இடத்தை விட்டுச் செல்லுமுன்னர், அத்தகைய தேடுகையின் போது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் பொருளின் அல்லது ஆவணத்தின் வைத்திருக்கையை ஒப்புக்கொண்டு, அவ்வாறு வைத்திருக்கப்பட்ட பொருட்களின் அல்லது ஆவணங்களின் விபரமான விவரணமொன்றுடன், பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"சட்டம்" என்பது, 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) என்று பொருளாகும் ;

"ஆவணம்" என்பது, விடயத்தைப் பதியும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்டதாக அல்லது பயன்படுத்தக்கூடியதாக எழுத்தில், எண்கள் அல்லது குறிகள் என்ற வழிவகைகள் மூலம் அல்லது அவ்வழிவகைகளுள் ஒன்றுக்கு மேற்பட்டவை மூலம் ஏதேனும் பதார்த்தத்தின்மேல் எடுத்துக்கூறப்பட்ட அல்லது விபரிக்கப்பட்ட ஏதேனும் விடயத்தையும் உள்ளடக்கும் ;

"பொருள்" என்பது, ஏதேனும் அசைவுள்ள, உருவக ஆதனம் என்று பொருளாகும் ;

"காஆஅ" என்பது, சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் என்று பொருளாகும் ;

"தடுத்துவைத்தல் இடம்" என்பது, நீதிமுறைக் கட்டளை மூலமாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, எவரேனுமாள் எந்தத் தடுத்துவைத்தல் இடத்தில், பொலிசு நிலையத்தில், சிறைச்சாலையில் அல்லது வேறேதேனும் இடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரென சந்தேகிக்கப்படுகின்றதோ அல்லது முன்னர் தடுத்துவைக்கப்பட்டிருந்தாரெனச் சந்தேகிக்கப்படுகின்றதோ, அந்த ஏதேனும் தடுத்துவைத்தல் இடம், பொலிசு நிலையம், சிறைச்சாலை அல்லது வேறேதேனும் இடம் என்று பொருளாகும் ;

8 - 313

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.